**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF M/S. SRI DEVARAAJAA M SAND ROUGH STONE QUARRY, LEASE OVER AN EXTENT OF 4.00.0 HA LOCATED AT S.F.No. 78/1A (P), 78/1B(P), KOTHAPETTA VILLAGE, KRISHNAGIRI TALUK, KRISHNAGIRI DISTRICT ON 30.07.2024 AT 11.00 AM AT M/S.KURINJI MAHAL, DHARGA ROAD – METPENDA SALAI, (NEAR TOLLGATE), KRISHNAGIRI.**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru.S. Babu | : | Revenue Divisional Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. M.Selvakumar | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 3 | Er. A.Vinodhini | : | Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 4 | Thiru. R.Arumugam | : | Representative of the Proprietor, M/s. Sri Devaraajaa M Sand Rough Stone Quarry |
| 5 | Thiru. M. Sheik Nawas | : | EIA Consultant, M/s. Geo Exploration and Mining Solutions Limited, Salem |
| | Public | : | 41 Nos. (Attendance enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Revenue Divisional Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed M/s. Sri Devaraajaa M Sand Rough Stone Quarry Lease over an Extent

of 4.00.0 Ha Located at SF.No. 78/1A (P), 78/1B(P), Kothapetta Village, Krishnagiri Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dinathanthi" and "The New Indian Express" dated 25.06.2024 and bit notices regarding public hearing was issued to the public of Kothapetta Village, Venktapuram Village, Malotti Village, Dharmaraj Nagar, Malsomaripattai Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Revenue Divisional Officer, Krishnagiri (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Revenue Divisional Officer, Krishnagiri has requested the project proponent to explain about their proposed rough stone quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru. M. Sheik Nawas, EIA Consultant, M/s. Geo Exploration and Mining Solutions Limited, Salem of the proposed rough stone quarry project has made presentation about the proposed rough stone quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed rough stone quarry project. The views and suggestions of the public are detailed below:

**1. Thiru. Aravinith Kumar, Palayapettai:**

Thiru. Aravinith Kumar has informed that, he has no job currently due to this reason my family is suffering from poverty. I will get a job opportunity by establishment of this proposed quarry project, due to this our family livelihood will increase.

**2. Thiru. Annadurai, Sivananthapuram:**

Thiru. Annadurai has said that, around 60 to 70 families of our village were worked in the existing quarry. The above families are migrating to Andhra Pradesh and Karnataka due to unemployment in the existing quarry. Now, the establishment of proposed quarry project will provide employment to our family members and thereby increase our livelihood. Therefore, he requested to grant permission for this proposed quarry project.

**3. Thiru. K.V.Venkitasamy, Puthupettai:**

Thiru. K.V.Venkitasamy has said that, by establishing the proposed quarry, the construction materials such as M-sand and Blue metal jelly will be available to the local people at affordable prices. Establishment of this proposed quarry will provide public welfare facilities such as drinking water facility, road facility, and health facility etc. to the nearby villages. Also, he welcomes this proposed quarry project.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 6 number of petitions were received on the proposed M/s. Sri Devaraajaa M Sand Rough Stone Quarry project during the public hearing meeting. The petitions are enclosed herewith.

Further, it is informed that there is no written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Rough Stone Quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

| | | |
|---|---|---|
| **District Environmental Engineer**<br>**Tamilnadu Pollution Control Board**<br>**Hosur** | **Revenue Divisional Officer**<br>**Krishnagiri** | **District Collector**<br>**Krishnagiri** |

**தி/ள். ஸ்ரீ தேவராஜா எம்.சாண்ட் ரப் ஸ்டோன் குவாரி, ச. எண். 78/1A (பகுதி), 78/1B (பகுதி), கொத்தபேட்டா கிராமம், கிருஷ்ணகிரி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட ரப் ஸ்டோன் குவாரி 4.00.0 ஹெக்டர் பரப்பளவில் குவாரி பணி நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 30.07.2024 அன்று மெட்பெண்டா சாலை, தர்கா ரோடு, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். குறிஞ்சி மஹாலில் முற்பகல் 11.00 மணி முதல் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.S.பாபு | : | வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி (மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er.M. செல்வகுமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 3 | Er.A.வினோதினி | : | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர். |
| 4 | திரு. R.ஆறுமுகம் | : | உரிமையாளரின் பிரதிநிதி தி/ள். ஸ்ரீ தேவராஜா எம்.சாண்ட் |
| 5 | திரு.M.ஷேக் நவாஸ் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் தி/ள்.ஜியோ எக்ஸ்பொளரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ், சேலம். |
| | பொதுமக்கள் | : | 41 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

தி/ள். ஸ்ரீ தேவராஜா எம்.சாண்ட் ரப் ஸ்டோன் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை

புரிந்த வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி, பொதுமக்கள் மற்றும் தி/ள். ஸ்ரீ தேவராஜா எம்.சாண்ட் ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினத்தந்தி" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 25.06.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், கொத்தப்பெட்டா கிராமம், வெங்கடாபுரம் கிராமம், மேலோட்டி கிராமம், தர்மராஜ் நகர், மேல்சோமாரிபேட்டை கிராமம் ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

வருவாய் கோட்டாட்சியர், கிருஷ்ணகிரி, அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் தி/ள். ஸ்ரீ தேவராஜா எம்.சாண்ட்

ரப் ஸ்டோன் குவாரி உரிமையாளர்களை உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

தி/ள். ஸ்ரீ தேவராஜா எம்.சாண்ட் ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு.M.ஷேக் நவாஸ், தி/ள்.ஜியோ எக்ஸ்பொளரேசன் அண்டு மைனிங் சொல்யுசன்ஸ், சேலம் அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

**1. திரு. அரவிந்த் குமார், பழையபேட்டை:**

திரு. அரவிந்த் குமார் அவர்கள், தனக்கு தற்போது வேலை இல்லை எனவும் அதனால் எங்கள் குடும்பம் வறுமையில் உள்ளது என்று தெரிவித்தார். உத்தேசிக்கப்பட்டுள்ள இக்குவாரி அமைவதன் மூலம் எனக்கு வேலை கிடைக்கும் என்றும் அதனால், எங்கள் குடும்பத்தின் வாழ்வதாரம் உயரும் என்று தெரிவித்தார்.

2. திரு.அண்ணாதுரை, சிவானந்தபுரம்:

திரு. அண்ணாதுரை அவர்கள், எங்கள் கிராமத்தில் 60, 70 குடும்பங்கள் குவாரியில் வேலை செய்து வருகின்றனர். தற்போது, குவாரியில் வேலையில்லாத காரணத்தினால் ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களுக்கு சென்று வேலை பார்ப்பதாக தெரிவித்தார். தற்பொழுது, உத்தேசிக்கப்பட்டுள்ள இக்குவாரி அமைவதன் மூலம் எங்கள் குடும்ப நபர்களுக்கு வேலை கிடைக்கும் என்றும் அதன் மூலம் வாழ்வதாரம் உயரும் என்றும் கூறினார். எனவே, இத்திட்டத்திற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

3. திரு . K.V. வெங்கடசாமி, புதுப்பேட்டை:

திரு.K.V. வெங்கடசாமி அவர்கள், உத்தேசிக்கப்பட்டுள்ள இக்குவாரி அமைவதன் மூலம் உள்ளூர் மக்களுக்கு மலிவு விலையில் எம்.சாண்ட், ஜல்லி போன்ற கட்டுமான பொருட்கள் கிடைக்கும் என்று தெரிவித்தார். மேலும், அருகில் உள்ள கிராமங்களுக்கு பொது நல திட்டங்களான குடிநீர் வசதி, சாலை வசதி, சுகாதார வசதி போன்றவற்றை ஏற்படுத்தி தருவதால் இத்திட்டத்தை தான் வரவேற்பதாக தெரிவித்தார்.

முடிவுரை:

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக் கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள தி/ள். ஸ்ரீ தேவராஜா எம்.சாண்ட் ரப் ஸ்டோன் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 6 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், தி/ள். ஸ்ரீ தேவராஜா எம்.சாண்ட் ரப் ஸ்டோன் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ,மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்திற்கு எவ்வித மனுக்களும் வரப்பெறவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்
ஓசூர்

வருவாய் கோட்டாட்சியர்
கிருஷ்ணகிரி

மாவட்ட ஆட்சியர்
கிருஷ்ணகிரி